ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/9 - 2016 නොවැම්බර් මස 07 වැනි සඳුදා - 2016.11.07

*1992/9 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 6 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான 2016.07.18 ஆந் திகதிய 1976/4 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பாசிப்பயறு (எச். எஸ். தலைப்பு இல. 0713.31.19) மற்றும் 2016.05.20 ஆந் திகதிய 1967/57 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் விதிக்கப்பட்ட மீன் வகை (எச். எஸ். தலைப்பு இல. 03.02 மற்றும் 03.03) சம்பந்தமான உத்தரவு 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, நவெம்பர் 07.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 03.02 | | மீன் புதியது அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந் தவை | ஒரு கிலோ கிராம் 10% அல்லது ரூபா 75 இரண்டிலும் எது கூடியதோ அது |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| | 03.03 | | தலைப்பு 03.04 இன் கீழ்வரும் முள்ளற்ற மீன் துண்டுகளும் பிற மீன் இறைச்சியும் நீங்கலாக ஏனைய மீன் குளிரால் உறையச் செய்யப்பட்டது (எச். எஸ். தலைப்பு இல. 0303.54 இன் கீழ் வரும் மெகரல் மீன் தவிர்ந்தவை) | ஒரு கிலோ கிராம் 10 % அல்லது ரூபா 75.00 இரண்டிலும் எது கூடியதோ அது |
| 2. | 07.13 | 0713.31.19 | பிற- பாசிபயறு | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 40.00 |
| 3. | 08.04 | 0804.50.50 | மங்குஸ்தான் பழங்கள் சோர்வற்ற புதிய | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |
| | | 0804.50.60 | மங்குஸ்தான் பழங்கள் - காய்ந்த | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |
| 4. | 08.05 | 0805.10.20 | தோடம்பழங்கள் - காய்ந்த | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |
| 5. | 08.08 | 0808.30 | பியர்ஸ் பழங்கள் | கிராம் ஒன்றுக்கு ரூபா 175.00 |
| 6. | 08.09 | 0809.29 | பிற- செறி பழங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| 7. | | 0809.40 | முந்திரிகை வற்றலும் சிலோசும் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |
| 8. | 08.10 | 0810.50 | கிவி பழம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 175 |
| 9. | | 0810.90.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |

12 - 25

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.